இவ்வழக்கானது கற்பழிப்பு தொடர்பான வழக்காக இருப்பதால் நீதிமன்றத்தின் கதவுகள், ஜன்னல்கள் மூடப்பட்டு, அரசு வழக்கறிஞர், எதிரியின் வழக்கறிஞர், எதிரி, பாதிக்கப்பட்ட பெண், நீதிமன்ற எழுத்தர் மற்றும் தட்டச்சர் ஆகியோர் மட்டும் உள்ள நிலையில் (இன்கேமரா) வழக்கின் விசாரணை தொடரப்பட்டது.

SC 59/2019

25.02.2022

**அசா1 ன் முதல் விசாரணை தொடர்ச்சி**

(இதச பிரிவு 376 ன் கீழ் குற்ற சாட்டு வனையப்பட்ட பின்னர் சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு விசாரணை மீண்டும் தொடரப்பட்டது. )

அரசு தரப்பில் முதல் விசாரணை சாட்சியை ஏற்கனவே விசாரணை முடித்துக்கொள்ளப்பட்டதாக கூறினார்.

**குறுக்கு விசாரணை எதிரி தரப்பில்**

பின்னவாசலில் உள்ள என் வீடும் 1 வது எதிரி வீடும் பக்கத்து பக்கத்து வீடு என்றால் சரிதான். எங்கள் வீடு கூறை வீடு. 1 வது எதிரி வீடு ஓட்டு வீடு. 1வது எதிரி வீட்டில் மின்சார இணைப்பு உண்டு, டிவி உண்டு. நான் டிவி பார்ப்பதற்கு 1 வது எதிரி வீட்டிற்கு செல்வேன். எங்கள் வீடும் எதிரியில் வீடும் தாயா பிள்ளையாக பழகி வந்தோம். டியூசன் சென்டரில் இருந்து இருசக்கர வாகனத்தில் நானும் 1 வது எதிரியும் பேராவூரணி பஸ் நிறுத்தத்திற்கு சென்றோம். அங்கு இருந்து பஸ்சில் புதுக்கோட்டை சென்றோம். புதுக்கோட்டையில் உள்ள ஆர்கேபி தியேட்டரில் அப்பு படம் பார்த்தோம். அதன் பிறகு நானும் 1வது எதிரியும் பஸ் ஏறி ஒரு கிராமத்திற்கு சென்றோம். அன்று இரவு அந்த கிராமத்தில் தங்கி இருந்தோம். அந்த வீட்டில் ஆட்கள் இருந்தார்கள். அங்கு சாப்பிட்டுவிட்டு படுத்து தூங்கிவிட்டோம். அதன் பிறகு மறுநாள் இரவு பஸ் ஏறி வேறு ஒரு ஊருக்கு சென்றுஅங்கு இருந்து சென்னைக்கு சென்றோம். ஒவ்வொரு ஊரிலும் பஸ்சில் ஏறி செல்லும் போது பஸ்சில் ஆட்கள் இருந்தார்கள். பஸ்டாடிலும் ஆட்கள் இருந்தார்கள். சென்னை சென்று அங்கு ஒருவர் வீட்டிற்கு சென்றோம். சென்னையில் இரண்டு, மூன்று நாட்கள் தங்கி இருந்தோம். அந்த வீட்டிலும் ஆட்கள் இருந்தார்கள். சென்னை சைதாபேட்டை வள்ளி வீடு காம்பளக்சில் தங்கி இருந்தோம். காம்பளக்சில் நடுவில் பாதையும், இருபுறமும் நான்கு நான்கு வீடுகள் என்றால் சரிதான். எல்லா வீட்டிலும் ஆட்கள் இருந்தார்கள் என்றால் சரிதான். அந்த காம்பளக்சின் உரிமையாளரும் அங்கு தான் குடியிருந்தார். காம்பளக்சின் எதிர்புறம் அடுக்குமாடி குடியிருப்பு என்றால் தெரியவில்லை. காம்பளக்சுக்கும் முன்புறம் உள்ள மெயின் ரோட்டில் வசையாக கடை உள்ளது என்றால் ஞாபகம் இல்லை. அந்த காம்பளக்சில்உள்ள வீட்டில் ஒன்றரை மாதம் தங்கி இருந்தேனா என்றால் 2 வாரத்தில் எனது தகப்பனாருக்கு போன் செய்துவிட்டேன். அங்கு குடியிருந்தபோது 1 வது எதிரி கம்பி கட்டும் வேலைக்கு சென்றார் என்றால் தெரியாது. நாங்கள் தங்கி இருந்த வீட்டின் பக்கத்து வீட்டுக்காரர்

பெயர் தற்போது ஞாபகம் இல்லை. அங்கு தங்கி இருந்த போது ஒரு ட்ராவல்ஸ் கம்பெனியில் வேலை பார்த்தேன். காலையில் 8.30 மணிக்கு வேலைக்கு சென்றால் மாலை 6.00 மணிக்கு வருவேன் என்றால் சரிதான். 1 வது எதிரியும் வேலைக்கு சென்று விட்டு இரவுதான் நாங்கள் தங்கி இருந்த வீட்டிற்கு வருவார். சம்பவத்தின்போது எங்களுக்கு 18 வயது என்றால் சரியல்ல 17 வயது. தற்போது எனக்கு திருமணமாகி குழந்தைகள் உள்ளன. திருப்பூரில் குடும்பத்துடன் வசித்து வருகிறேன். 17.7.2000 ம் தேதியில் நான் காலையில்கோச்சிங் சென்டருக்கு சென்றதாகவும், அப்போது மதியம் 2. மணியளவில் எங்களது வீட்டிற்கு பக்கத்தில் வசித்து வந்த பழனிவேல் என்பவர் நான் படிக்கும் சென்டருக்கு வந்து என் தகப்பனாருக்கு உடல்நிலை சரியில்லை என்றும் உடனே அழைத்து வரும்படி சொன்னார்கள் என்றும் வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. 1 ம் எதிரி திருப்பூருக்கு என்னை அழைத்துச்செல்வதாக பேருந்தில் புதுக்கோட்டைக்கு அழைத்துச்சென்றதாகவும், அங்கு இரவு ஒரு வீட்டில் என்னை தங்க வைத்தாகவும், ஆனால் அது யாருடைய வீடு என்று எனக்கு தெரியாது என்பதும், அந்த வீட்டில் ஒரு கணவன், மனைவி இருந்தார்கள் என்றும், அவர்கள் யாரென்று எனக்கு தெரியவில்லை என்றும், மறுநாள் இரவு பழனிவேல் மற்றும் இன்னொருவர் என்னை சென்னைக்கு பஸ்சில் அழைத்து சென்றதாகவும், சென்னை சைதாப்பேட்டையில் வள்ளி இல்லம் என்று பெயர் போடப்பட்ட வீட்டுக்கு என்னை அவர்கள் அழைத்து சென்றதாகவும், அவ்வாறு என்னை ஆஜர் 1 ம் எதிரி என்னை அழைத்துச் சென்ற போது எனக்கு 17 வயது என்றும், 2 ம் எதிரியை யார் என்று எனக்கு தெரியவில்லை என்றும், சைதாப்பேட்டையில் என்னை தங்க வைத்த வீட்டில் ஆஜர் 1 ம் எதிரி பழனிவேல் மட்டும் என்னுடன் இருந்தார் என்றும், அவ்வாறு இந்த வீட்டில் 30 நாட்டகள் 1 ம் எதிரி பழனிவேல் என்னை அந்த வீட்டில் வைத்திருந்தார் என்றும், அங்கு ஆஜர் 1 ம் எதிரி பழனிவேல் எனக்கு பாலியல் துன்பங்கள் செய்தாகவும், என்னை கெடுத்ததாகவும் . என்னுடைய பெண் உறுப்பில் அவருடைய ஆண் உறுப்பை வைத்து அழுத்தி எனக்கு இரத்தம் வரும்படி செய்தாகவும், 1 ம் எதிரி பழனிவேல் என்னை பலாத்காரம் செய்த போது நான் அதற்கு உடன்படவில்லை என்று சொல்லி என்னை அடித்து துன்புறுத்தியதாகவும், ஆனால் எனக்கு உடம்பில் வலி இருந்தது என்றும், அதன் பிறகு ஆஜர் எதிரி என்னிடம் தப்பாக நடந்து கொள்கிறார் என்பதனை நான் புரிந்து கொண்டு எனது பெற்றோருக்கு பக்கத்தில் இருந்தவர்களிடம் உதவி கேட்டு போன் செய்ததாகவும், அதன் பிறகு எனது தகப்பனார் சென்னைக்கு வந்து என்னை அழைத்துக் கொண்டு சென்றதாகவும், போலிஸ் விசாரணையில் சொல்வில்லை என்றால் காரணம் போலிஸ் என்னை விசாரிக்கவில்லை.

=

நான் சொல்ல என் உத்திரவுபடி தட்டச்சிடப்பட்டு

என் முன்னிலையிலும், மேற்பார்வையிலும்
சாட்சிக்குப் படித்து காண்பிக்கப்பட்டு சாட்சியால்
சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

(ஒம்/- ஜி.சுந்தரராஜன்)
அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,
(விரைவு மகிளா நீதிமன்றம்)
தஞ்சாவூர்.

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF MAHALIR NEETHIMANDRAM (FAST TRACK MAHILA COURT), THANJAVUR.

SC. No. 59/2019

Prosecution **PW 2**

| | |
|---|---|
| Name | விசாலாட்சி |
| Husband / Father Name | |
| Village | |
| Taluk | |
| Occupation | |
| Religion | |
| Age | |
| Date | 25.02.2022 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

முதல் விசாரணை -

நான் தற்போது திருப்பூரில் குடியிருந்து வருகிறேன். அசா1 எனது மகள்.புகார்தாரர் எனது கணவர், எதிரிகளை அடையாளம் தெரியவில்லை. 17.07.2000ம் தேதி சென்னைக்கு என்மகளை 1 1 வது எதிரி சென்னைக்கு அழைத்து சென்றுவிட்டார். அப்போது என் மகள் 12ம் வகுப்பு படித்துக்கொண்டிருந்தார். என் மகளை ஒன்றரை மாதம் கழித்து தேடி கண்டுபிடித்தோம். என் மகள் போன் செய்த பிறகுதான் கண்டுபிடித்தோம்.என் மகளை காணவில்லை என்று புகார் கொடுத்து இருந்தோம். பின்பு என் மகளை கண்டுபிடித்து பேராவூரணி காவல் நிலையத்தில் அழைத்து வந்து ஒப்படைத்தோம். என் மகளை அழைத்து சென்று 1வது எதிரி கெடுத்துவிட்டதாகவும் கொடுமை செய்ததாகவும் என் மகள் என்னிடம் சொன்னது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

குறுக்கு விசாரணை எதிரி தரப்பில்

சம்பவத்தின் போது நான் என் கணவருடன் திருப்பூரில் இருந்தேன். என் மகள் பாட்டி வீட்டில் தங்கி படித்து வந்தாள். சம்பவத்தின் போது எனது மகள் 12ம் வகுப்பு முடித்துவிட்டாள். சென்னைக்கு சென்று எனது நாத்தனார் கணவர் சுப்பிரமணியும், கொழுந்தனார் மகன் சிதம்பரமும் அழைத்துவந்தார்கள். சைதாப்பேட்டை நீதிமன்றத்தில்ஆஜர் செய்து திருப்பூருக்கு அழைத்து வந்து மீண்டும் பேராவூரணி காவல் நிலையத்திற்கு அழைத்து வந்தோம். திருப்பூரில் இரண்டு, மூன்று நாள் வைத்து இருந்தோம். மீண்டும் என் மகளை திருப்பூருக்கு அழைத்து சென்றோம். பிறகு என்னை

போலிசார் என்னை விசாரிக்கவில்லை தற்போது தான் நீதிமன்றத்திற்கு வந்துள்ளேன். முதல் விசாரணையில் சொன்னது போல் சம்பவம் நடக்கவில்லை என்றால் சரியல்ல.

**2** ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை

நான் சொல்ல என் உத்திரவுபடி தட்டச்சிடப்பட்டு

என் முன்னிலையிலும், மேற்பார்வையிலும்
சாட்சிக்குப் படித்து காண்பிக்கப்பட்டு சாட்சியால்
சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

(ஒம்/- ஜி.சுந்தரராஜன்)
அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,
(விரைவு மகிளா நீதிமன்றம்)
தஞ்சாவூர்.

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF MAHALIR NEETHIMANDRAM (FAST TRACK MAHILA COURT), THANJAVUR.

SC. No. 59/2019

Prosecution **PW 3**

| | |
|---|---|
| Name | சிதம்பரம் |
| Husband / Father Name | |
| Village | |
| Taluk | |
| Occupation | |
| Religion | |
| Age | |
| Date | 25.02.2022 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

முதல் விசாரணை -

நான் தற்போது திருப்பூரில் வசித்து வருகிறேன். அசா1 என் மகள். அசா2 என் மனைவி. 17.7.2000 ம் தேதி பேராவூரணி பின்னவாசலில் தங்கி டியூசனுக்கு சென்ற என் மகள் வீட்டிற்கு திரும்ப வரவில்லை. காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். என் மகளை 1 வது எதிரி பழனி வேல் கடத்தி சென்றதாக புகார் கொடுத்தேன். அந்த புகார்அதசா 1. புகார் கொடுத்து 30 நாள் கழித்து சென்னையில் என் மகள் இருப்பதாக என்மகளே எனக்கு போன் செய்து சொன்னது. என் மைத்துனரும் என் தம்பியும் சென்னை சென்று அழைத்து வந்து பேராவூரணி காவல் நிலையத்தில்ஒப்படைத்தார்கள். என் மகளை நான் விசாரித்த போது என்னை திருப்பூருக்கு அழைத்து செல்வதாக சொல்லி சென்னக்கு அழைத்து சென்று கற்பழித்து சிகிரட்டால் உடம்பில் சுட்டதாகவும் சொன்னது. என் மகளை மருத்துவ பரிசோதனை செய்தார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

புகார் 19.07.2000 ல் கொடுத்தேன் என்றால் சரிதான். சென்னைக்கு நாங்கள் போலிசாரை அழைத்து செல்லவில்லை. சென்னைக்கு நான் செல்லவில்லை. சென்னையில் என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது. சென்னையில் இருந்து என் மகளை பேராவூரணி காவல்நிலையத்திற்கு அழைத்து வந்தோம். பேராவூரணியில் இருந்து நீதிமன்றத்திற்கு அழைத்து சென்று பின்னர் திருப்பூருக்கு

அழைத்து சென்றோம். போலிசார் என்னை விசாரிக்கவில்லை. முதல் விசாரணையில் வழக்கிற்காக கற்பனையாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**2**ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை இல்லை

நான் சொல்ல என் உத்திரவுபடி தட்டச்சிடப்பட்டு

என் முன்னிலையிலும், மேற்பார்வையிலும்
சாட்சிக்குப் படித்து காண்பிக்கப்பட்டு சாட்சியால்
சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

(ஒம்/- ஜி.சுந்தரராஜன்)
அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,
(விரைவு மகிளா நீதிமன்றம்)
தஞ்சாவூர்.